# பாதைகள்

தன் அறையில், ஜன்னல் அருகே நின்று, கமலா வெளி உலகைப் பார்த்துக் கொண்டிருக்கிறாள். இது அவளுக்கு ஒரு பொழுதுபோக்கு. பார்வை செல்லும் இடம் எல்லாம் இயற்கையின் வனப்பு பரவிக்கிடக்கின்றது. ஆம்! இந்த மலைப் பிரதேசம் இயற்கைதேவி அவளது கவின்மிகு கோலங்கள் காட்டி நிற்கும் இடம்! அவள், அழகு நடைபயிலும் இடம்! எழில் நடம் புரியுமிடம்!.

எங்கு நோக்கினும் பனிப்படலம் கடந்து செல்லும் மலைத் தொடர்கள்; பச்சைக் கம்பளம் போர்த்துள்ள பள்ளத்தாக்குகள்; உயர்ந்து நிற்கும் யூக்கலிப்டஸ் மரங்கள்; பசுமை தவழும் தேயிலைத் தோட்டங்கள்; இயற்கைப் பெண்ணின் அழியா இளமையினைப் பறைசாற்றி நிற்கும் இது போன்ற இன்னும் அநேக அழகுக் காட்சிகள்!.

இயற்கை எழில் கொழிக்கும் இந்த மலைப்பூமியுடன் கமலாவின் வாழ்வு இணைந்து விட்டிருந்தது. அவளது இளமையோடு தொடர்புடைய மண்தான் இந்த நீலகிரி மண். ஆம்! கமலாவின் மங்கைப் பருவம் இங்குதான் கழிந்தது! அவளது இளமை வாழ்வு இங்குதான் நடந்தது.

இந்த நீலகிரி மண்ணில் கமலா காலடி வைத்தபோது அவள் ஒரு பருவமங்கை. இருபது வயதான இளம் பெண்ணாகத்தான் இங்கு வந்து ஆங்கிலப் பள்ளியில் ஆசிரியையாகச் சேர்ந்தாள்.

ஜன்னல் ஓரமாக நின்று உள்வரும் கர்றறை உடலுக்கும் உள்ளத்துக்கும் புத்துணர்ச்சி அளிக்கும் புதுக்காற்றை – மெல்ல உள்ளே இழுத்து – சிறிதுநேரம் மூச்சை அடக்கிப் பின்னர் மெதுவாக வெளிவிடும் பயிற்சி நாள்தோறும், காலைமாலை இருவேளையிலும் அவள் கடைபிடிப்பதாகும். உயர்ந்தோங்கி விண்ணைத் தழுவி நிற்கும் இம்மலைச் சரிவுகளில் வீசுவது, புழுதி தூசி இவை கலக்காத சுத்தமான காற்று. அதுமட்டுமல்ல. யூகலிப்டஸின் மணம், மற்றும் பல்வேறு மூலிகைகளின் மணம் கலந்து இழைந்து வரும் இனிமையான காற்று. கண்ணையும், கருத்தையும் கவரும் அழகுச் சூழலினை அடுத்து - இந்த நீலகிரி மலைப் பிரதேசத்தில் கமலாவுக்குப் பிடித்தது இங்கு நிலவும் தூயகாற்றும், புனிதம் தவழும் சுற்றுப்புறமும்தான்!.

இப்போது இந்த மலைப்பூமியில் வசந்த காலம்! வண்ண வண்ண மலர்கள் பூத்துக்குலுங்கி கண்ணுக்கு விருந்தளித்து நிற்கின்றன. கமலாவின் வாழ்வில் வசந்தம் எப்போதோ வந்து போய்விட்டது. வந்த சுவடுகூட இல்லாமல் சென்று மறைந்துவிட்டது. கமலா இப்போது இளமைக்கும் முதுமைக்கும் நடுவே நிற்கிறாள். இன்னும் சொல்வதானால் முதுமைக்குத்தான் சமீபத்தில் இருக்கிறாள்.

கமலா பள்ளிக்குப் புறப்படத் தயாரானாள். உடைமாற்றிவிட்டுத் தலைவாரிக் கொண்டாள். தான் வளர்க்கும் ரோஜாச் செடியிலிருந்து ஒரு மலரைப் பறித்துக் கூந்தலின் வலதுபக்கத்தில் காதருகே சூடிக்கொண்டாள். இப்படி ஒற்றை மலராகத்தான் சூடுவாள். அதுவும் வெள்ளைரோஜாதான், எப்போதும். இந்த மலை நிலத்தில் வெள்ளைரோஜாவுக்குப் பஞ்சமே இருப்பதில்லை. வெள்ளை ரோஜாவினை ஒற்றை மலராகச் சூடுகிறாளே அதில் ஒரு பொருத்தம் உள்ளது. அவளும் தனி மலர்தான். அவள் வாழ்வும் வண்ணங்கள் இல்லாத ஒரு வெறுமை வாழ்வுதான்.

கமலாவைப் பற்றி உடன் வேலைப்பார்க்கும் யாருக்குமே எதுவும் தெரியாது. யாரோடும் ஒட்டாதபடி ஒதுங்கியே நின்றாள். மற்றவரிடம் பழகாமல் விலகியே வாழ்ந்தாள். அவள் ஏன் இப்படித் தனியாக இருக்கிறாள், அவள் குடும்பம், உறவு இது பற்றியெல்லாம் யாருக்கும் தெரியாது. யாரும் கேட்டுத் தெரிந்து கொள்ளவும் துணிந்தது கிடையாது. தன்னைச் சுற்றிலும் ஒரு திரையைப் போட்டுக்கொண்டு அதன் மறைவினிலே வாழ்ந்து விட்டாள். சொந்தம் பந்தம் எதுவும் இல்லாமல் - விடுமுறைக்குக் கூட சொந்த ஊருக்குப் போகாமல் - பெற்றோர் உறவினர் யாரும் இல்லையோ என்னும்படி ஏன் இப்படித் தனியாக அநாதைப்போல் வாழ்கிறாள் என்பது பலருக்கும்

புரிந்துகொள்ளமுடியாத புதிராகத்தான் இருந்தது. ஆனால் புதிரைப் புரிந்து கொள்ளும் முயற்சியில் யாரும் இறங்கியதில்லை. அவள் மனம் விட்டு யாருடனும் பேசியதில்லை. அவள் பொழுது போக்கெல்லாம் புத்தகங்கள் படிப்பதும், பள்ளியோடு இணைந்த விடுதியில் உள்ள குழந்தைகளைக் கவனிப்பதும்தான். அதிலும் குறிப்பாக, அனிடாவுடன் உரையாடி மகிழ்வது என்றால் அவளுக்கு அலாதிப் பிரியம். அனிடாவுக்கு இப்போது ஆறு வயது. சென்ற ஆண்டுதான் விடுதியில் சேர்ந்தாள். அவள் அப்பாவுக்கு டெல்லியில் வேலை. அம்மா இல்லை. விமான விபத்தில் இறந்துவிட்டாள். அனிடா அழகிலே ஒரு குட்டி தேவதைதான். அவளது பேச்சின் இனிமையும் சிரிப்பின் கவர்ச்சியும் கமலாவை ஈர்த்துவிட்டன. அனிடாமேல் பரிவும், பாசமும் கொண்டு தாய்போல் பழகினாள் கமலா. அவளுக்குத் தலை வாரிவிடுவாள். பூச்சூடிவிடுவாள். அனிடாவும் கமலாவிடம் ஒட்டிக்கொண்டாள். எப்போதும், ‘டீச்சர், டீச்சர்’ என்று சுற்றி வந்தாள்.

கமலா பள்ளிக்குப் புறப்பட்டுவிட்டாள். தன் அறையினைப் பூட்டிவிட்டு, தோட்டத்தினைக் கடக்க ஆரம்பித்தாள்.

‘டீச்சர், டீச்சர்’ என்று அனிடா ஓடிவந்தாள். ‘உங்களுக்கு லெட்டர் வந்திருக்கு டீச்சர். இப்போதான் போஸ்ட்மேன் கொடுத்ததாக கார்டனர் என்னிடம் கொடுத்தார். இந்தாங்க டீச்சர்’ என்று இரைக்க இரைக்கக் கூறிவிட்டுக் ஒரு கடிதத்தினைக் கொடுத்தாள். அனிடாதான் கமலாவின் பெர்ஸனல் அஸிஸ்டென்ட் என்பது கார்டனரின் எண்ணம்.

கமலா தோட்டத்தில் நின்றே கடிதத்தைப் பிரித்துப படித்தாள். கடிதம் சென்னையிலிருந்து வந்திருந்தது. விமலா-கமலாவின் பெரியப்பா மகள்-எழுதியிருந்தாள். இரண்டு மாதங்களுக்கு முன்னர் நிகழ்ந்த மோகனாவின் மறைவு, அதனையொட்டி மோகனாவின் குடும்பத்தில் நிலவும் இன்றையை நிலைமை இவற்றைத் தெரிவிக்கவே அந்தக்கடிதம். இந்தக் கடிதம் மூலம் கமலா தெரிந்துகொண்ட செய்திகள் அவள் மனத்தில் பழைய நினைவுகளைக் கொண்டு வந்தன. அந்தக் கடந்தகால நினைவுகளில் மூழ்கிய வண்ணம் பள்ளியை நோக்கி நடக்கலானாள். அவள் மனமோ ஒரு தலைமுறைக்கு முந்திய காலத்திற்குச் செல்லலாயிற்று.

*****

அப்போது கமலா இருபது வயதுப் பருவமங்கை. கல்லூரி மாணவி, பணமும், செல்வாக்கும் மிக்க பெரிய இடத்துப் பெண், அதற்கேற்ற நடை, உடை, பாவணை. வீட்டிலே அவள்தான் செல்லப்பெண். சிநேகிதிகளுடன் சினிமா, டிராமா என்று அலைவாள. கட்டுப்பபாடற்றுச் சிறகடித்துப் பறக்கும் சுதந்திரப் பறவை அவள். இடங்கள் பார்ப்பதிலும், இயற்கையை ரசிப்பதிலும் மிகவும் ஈடுபாடு உடையவளாய் இருந்தாள். காரில் தினமும் பீச்சுக்குப் போய் விடுவாள்.

இன்பவானில் சுதந்திரப் பறவையாகக் கமலா சுற்றிவந்த நேரத்தில்தான் அவளுக்குத் திருமணப் பேச்சு ஆரம்பமானது. கமலாவின் அம்மாதான் அதில் மிகவும் அக்கறை காட்டினாள். கமலாவின் அப்பாகூட ‘இன்னும் கொஞ்சம் நாள் போகட்டுமே’ என்று சொல்லிப் பார்த்தார். கமலாவின் அம்மா விடவில்லை. கமலாவுக்கு மாப்பிள்ளை தேடினார். பல இடங்களில் பார்த்துவிட்டு இறுதியாக மதுரையில் ஒரு நகைவியாபாரியின் வீட்டில் சம்பந்தம் பண்ண முடிவு செய்தனர். நகைவியாபாரியின் ஒரே புதல்வனான ரவிதான் கமலாவுக்குப் பேசியிருந்த மாப்பிள்ளை.

ரவி கமலாவின் போட்டோவைப் பார்த்தான். ரதி மாதிரி இருந்தாள் கமலா. அவள் பி.ஏ. பைனல்ஸ் படித்துக் கொண்டிருந்தாள். ரவி intermediate வரை படித்துவிட்டு கடையைக் கவனிப்பதற்காக படிப்பை இறுதியில் நிறுத்தியிருந்தான். தன்னைவிட அதிகம் படித்தவளை மணப்பதுபற்றிக் கொஞ்சம் தயங்கத்தான் செய்தான். அதுமட்டுமல்ல. ரவி குடும்பத்தினரோ நடுத்தர பணக்காரர்தான். கமலா வீட்டாரோ பெரிய செல்வந்தர்கள். கமலா ‘மிகவும் நல்லவள்’ என்று

விசாரித்து தெரிந்து கொண்டிருந்தான். எனவே கொஞ்சம் துணிச்சலுடன் - அதாவது உள்ளூற தயக்கத்துடன் -'சரி' என்று சம்மதித்துவிட்டான். கமலாவுக்கு திருமணப் பேச்சே பிடிக்கவில்லை. பெற்றோரின் கட்டாயத்திற்காக ரவியை மணக்கச் சம்மதித்தாள்.

திருமணம் வெகு விமரிசையாக நடந்தது. கமலாவின் தோழிகள் அனைவரும் வந்திருந்து வாழ்த்துக்கள் தெரிவித்தனர். பரிசுகளோ மலைபோல் குவிந்தன. கமலாவுக்கு எல்லாமே விளையாட்டுப் போலத் தெரிந்தது. ஒரு பொறுப்புக்குள் நுழைகிறோம் என்ற எண்ணமோ அல்லது இன்ப வாழ்வுக்குள் அடியெடுத்து வைக்கிறோம் என்ற எண்ணமோ எதுவுமே இல்லை. அவளைக் குறை கூற முடியாது!. இருபதுவயதுக் குமரிதான் என்றால் கூட அவள் குழந்தைத் தனம்தான் நிறைய இருந்தது. திருமணத்திற்கு மனமும் பக்குவமடைய வேண்டுமென்றோ?.

பொம்மைக் கல்யாணம் போல் அவர்கள் திருமணம் நடந்துவிட்டது. ரவி அவளிடம் மிகுந்த அன்போடு பழகினான். குழந்தையாகவே அவளை நடத்தி வந்தான். கமலா ஒரு மாதம் மெட்ராஸில் இருந்து பி.ஏ. படிப்பை முடித்து விடுகிறேன் என்றாள். ரவியும் அவள் ஆசைக்குக் குறுக்கே நிற்கவில்லை. 'சரி, கமலா. நீ இங்கு இருந்து படி. பரீட்சை முடிந்ததும் நான் இங்கு வந்து உன்னை அழைத்துச் செல்கிறேன்' என்று சொல்லிவிட்டு கடையைக் கவனிக்க மதுரை சென்றுவிட்டான்.

கமலா பரீட்சை எழுதி முடித்துவிட்டாள். கமலாவை அழைத்துச் செல்ல ரவி வந்திருந்தான். கமலா ரவியுடன் மதுரைக்குச் சென்றாள். ரவியின் குடும்பம் தன் குடும்பத்தைப் போன்ற செல்வாக்குடைய பணக்காரக் குடும்பம் இல்லை என்னும் கமலாவின் கண்டுபிடிப்பு அவள் நெஞ்சில் முள்ளாகப் பாய்ந்தது. தான் பெரிய இடத்துப்பெண், ரவி சாதாரணமானவன் என்னும் எண்ணம் அவள் மனத்தில் தோன்றியது. அந்தஸ்தில் உள்ள வேறுபாடு அவள் உள்ளத்தில் வேர் கொள்ள ஆரம்பித்தது. அந்தஸ்து, செல்வாக்கு இவற்றில் உள்ள ஏற்றத்தாழ்வுகள் தவிர, வேறு பல முரண்பாடுகளையும் கமலா உணரத்துவங்கினாள். இருவரிடையேயும், பொதுவாகவே, ஒற்றுமைகளைவிட வேற்றுமைகளே நிறைய இருந்தன. கமலாவுக்குத் தான் ஏமாற்றப்பட்டு விட்டோம் என்னும் எண்ணம் எழுந்தது. ரவி தன்னை மணக்க முன் வந்தது அவன் தெரிந்து செய்த குற்றம் - ரவி தன்னை மணக்கச் சம்மதித்திருக்கக்கூடாது, மறுத்திருக்க வேண்டும் என்று நினைத்தாள். ரவி, ரவியின் பெற்றோர், தன் பெற்றோர் எல்லாருமாகச் சேர்ந்து தன்னை வஞ்சித்து விட்டார்கள் என்று எண்ணிக் கொண்டாள்.

ரவிக்கும் கமலாவுக்கும் மனத்தாங்கல் அடிக்கடி ஏற்பட்டது. கமலா ரவியின் விருப்பப்படி நடந்து கொள்ளவில்லை. ரவி பொறுமையுடன் சகித்துக் கொண்டான். இருவரும் மனம் விட்டுப் பேசியதில்லை.

'கமலா, நான் உன்னை மனதார நேசிக்கிறேன். அப்படியிருந்தும் நீ ஏன் இப்படி நடந்துக்கிறே?'

'என்னைப்போல அழகியை, பணக்காரியை யாருக்குமே நேசிக்கத்தான் தோன்றும். இது ஒன்றும் அதிசயம் இல்லையே!.

'உன் பணத்துக்காகவா நான் உன்னை நேசிக்கிறேன்? இல்லை கமலா, நான் உன்னைத் தான் நேசிக்கிறேன். உன் பணத்தையில்லை'

'பணம் இல்லாதவங்க எல்லாம் வேறு எப்படிப் பேச முடியும்? தங்களிடம் இல்லாததைத் தங்களுக்குப் பிடிக்கவில்லை என்றுதான் சொல்லுவாங்க'.

'பணம் என்றைக்கு வேண்டுமானாலும் சம்பாதிச்சுக்கிடலாம். எவ்வளவு வேண்டுமானாலும் சம்பாதிச்சுக்கிடலாம். உனக்கு எவ்வளவு பணம் வேண்டுமானாலும் நான் சம்பாதிச்சுத் தர்றேன், கமலா.'

‘பணம் சம்பாதிச்சிட்டாக்கூட, எங்க அந்தஸ்து உங்களுக்கு ஒருநாளும் வராது’

‘உங்க அந்தஸ்துனா?’

‘எங்க அப்பா, அம்மா அந்தஸ்து, எங்க குடும்ப அந்தஸ்து’.

‘உங்க குடும்ப அந்தஸ்து எந்த விதத்திலே நம்ப இரண்டு பேருடைய இன்ப வாழ்வுக்கு அடிப்படையாவோ அல்லது தடையாகவோ அமைய முடியும்னு தெரியலை, கமலா, எனக்கு’.

‘நீங்க உங்களைவிடக் குறைஞ்ச அந்தஸ்துக்காரியைக் கல்யாணம் பண்ணியிருந்தா, இது உங்களுக்குப் புரிஞ்சிக்கும். இப்போ எப்படி உங்களுக்குப் புரியும்?’

‘ஆமாம் கமலா, நான் தப்புத்தான் பண்ணிட்டேன். சம அந்தஸ்து மணவாழ்வுக்கு ரொம்ப அவசியம் என்று எண்ணாமல் போயிட்டேன். ‘நீ ரொம்பவும் நல்லவள்’ என்று கேள்விப்பட்டதினாலே நம்மிடையே அந்தஸ்து, செல்வாக்கு, படிப்பு இதிலே உள்ள வேறுபாடு எல்லாம் நம்ம இன்பத்திற்குக் குறுக்கே நிற்கும்னு நினைக்கலை. என் கணக்குத் தப்பாயிருச்சு, கமலா’.

‘நான் செல்வத்திலே வளர்ந்தவள். செல்வத்திலே புரண்டவள். என் இஷ்டப்படியே நடந்து பழக்கப்பட்டவள். ‘நல்லவள்’ என்ற வார்த்தையைப் பற்றியெல்லாம் அலட்டிக்கிட்டதே கிடையாது. எனக்கு வேண்டியதெல்லாம் சந்தோஷமான வாழ்க்கை. நான் நல்லவளாக வாழ்கிறேனா இல்லையா என்பது எனக்கு முக்கியமில்லை. நான் சந்தோஷமா வாழ்கிறேனா, இல்லையா என்பதுதான் எனக்கு முக்கியம்’.

‘‘கமலா இப்போதும் உன் சந்தோஷத்துக்கு ஒரு குறைவும் இல்லாம நான் பார்த்துக் கொள்கிறேன்.’’

‘‘அது உங்களால் முடியவே முடியாது’’.

இப்படிப்பட்ட தர்க்கமெல்லாம் ரவிக்கும், கமலாவுக்கும் அடிக்கடி வரும். ரவி பொறுத்துப் போய்விடுவான். கமலாவின் பேச்சில், சில நேரங்களில் அவளது பணத்திமிர் அதிகமாகவே கலந்து இருக்கும். ஆனாலும் ரவி தன்னைக் கட்டுப்படுத்திக் கொள்வான்.

ரவி, கமலா இல்லற வாழ்வு பெயரளவில் நடந்து கொண்டிருந்தது. அது கூட நெடுநாள் நீடிக்கவில்லை. ஒருநாள் கமலா ஊருக்குப் புறப்படத் தயாராகிவிட்டாள்.

‘என்னை எங்க வீட்டிலே கொண்டுபோய் விட்டிருங்க. எனக்கு எங்க அம்மாவைப் பார்க்கணும் போல இருக்கு’.

‘இப்போ தானே கமலா, நீ அங்கிருந்து வந்தாய்? அதற்குள்ளே ஏன் போகனும்?’

‘நீங்க கொண்டுபோய் விடலைன்னா, நான் மட்டும் தனியாகவே போறேன்’.

‘இதுதான் உன் இஷ்டம்னா, சரி கமலா, நீ புறப்படு. நானே உன்னைக் கொண்டுபோய் விட்டுவிடுகிறேன்.’

ரவியும், கமலாவும் அன்றிரவு சென்னைக்குப் புறப்பட்டுவிட்டனர். ரவியின் இதயம் வேதனையில் துடித்தது. அவன் சோகக் கடலில் மூழ்கிவிட்டான். ரயிலில் கமலா தூங்கிவிட்டாள். ரவியோ அவளது அழகுமுகத்தைப் பார்த்துக்கொண்டே இருந்தான். மாசு மருவற்ற குழந்தை முகம். அந்தஸ்து, கௌரவம் இவற்றிற்கு இடம் கொடுப்பவளின் முகமா இது என்று எண்ணிக் கொண்டான். காலப் போக்கில் எல்லாம் சரியாகிவிடும் என்று மனத்தினைத் தேற்றிக் கொண்டான்.

கமலாவின் வீட்டில் அவளை யாரும் எதிர்ப்பார்க்கவில்லை. ‘சும்மா தான் அம்மா வந்தேன்’ என்றாள். அடுத்த நாள் ரவி, ஊருக்குப் புறப்பட ஆரம்பித்தான். கமலாவின் பெற்றோர் அவனை தங்களுடன் இருக்கும்படி வேண்டினர். கமலாவோ அவனை தங்கும்படி சொல்லவில்லை. இனி எதற்கு

இருக்கவேண்டும் என்று கிளம்பிவிட்டான். அவளிடம் விடைபெறுவதற்காக அவளை அவளுடைய அறையில் சந்தித்தான்.

‘கமலா, நான் இன்றைக்கு ஊருக்குப் போகிறேன். நீ என்றைக்கு வருவாய்?’

‘நான் பிறகு எழுதுகிறேன்’.

‘கமலா, நான் உனக்காக நாட்களே எண்ணிக் கொண்டு காத்திருப்பேன். நான் ஊருக்குப் போய்விட்டால் கூட, என் எண்ணமெல்லாம் இங்கேதான் இருக்கும். நீ சீக்கிரமாய்த் திரும்பிவிட்டால் நான் ரொம்பவும் மகிழ்ச்சி அடைவேன். நான் போய் வர்றேன், கமலா.’

ரவியின் அன்பு வார்த்தைகளுக்கு அவள் பதில் ஏதும் கூறவில்லை. ரவி புறப்பட்டுச் சென்றுவிட்டான்.

ரவிபோய் இரண்டு மாதம் ஆகிவிட்டது. கமலா ரவியிடம் திரும்பிப் போவதைப் பற்றி நினைக்கவேயில்லை. கமலாவின் அப்பா, அம்மா இருவருமே அறிவுரை கூறிப் பார்த்தனர். கமலாவோ செவி சாய்க்கவே இல்லை. ரவியிடம் இருந்து கமலாவுக்குக் கடிதம் ஒன்று வந்தது. அவன் தன் எண்ணங்களையெல்லாம் அதிலே கொட்டி வைத்திருந்தான்.

‘என் கண்மணி கமலாவுக்கு,

இத்தனை நாளும் உன் வரவினை நான் ஆவலோடு எதிர்பார்த்து, உன் கடிதத்திற்காக காத்திருந்தேன். உன் கடிதமோ வரவில்லை.

என் அன்பை உன்னால் உணர முடியவில்லை. நான் உன்னிடம் காட்டியது எல்லாம் கையளவு அன்புதான். நான் உன்னிடம் கொண்டிருப்பதோ கடலளவு அன்பாகும்.

உன் இன்பவாழ்வுதான் என் இலட்சியம். உன் வாழ்விலே என்றென்றும் இன்பம் மலரும்படிச் செய்வேன் என்று உறுதியளிக்கிறேன்.

நீ என் கண்ணின் பாவை! இமைகள் விழிகளைக் காத்தல் போன்று நான் உன்னைக் காத்துக் கொள்வேன். நான் உன்னிடம் எதிர்பார்ப்பதெல்லாம் உன் இதயம் பொழிகின்ற அன்பு.

நீ எப்போது வருவாய் என ஏங்கித் தவிக்கிறேன். நீ எப்போது வருகிறாய் என உடனே எழுது.

உன் அன்புள்ள ரவி.

கமலா இக்கடிதத்தைப் படித்தாள். அவளது மனத்தினை அவனது எழுத்துக்கள் தொடத்தான் செய்தன. ஆனாலும் அவள் மனத்தினில் வேர்கொண்டிருந்த அந்தஸ்து வேறுபாடு பற்றிய எண்ணங்கள் அழியாமல் இன்னும் அப்படியேதான் இருந்தன. ரவியுடன் இணைந்து வாழ்வு நடத்துவதை அவள் மனம் ஒப்புக் கொள்ளவில்லை. எனவே தான் வருவது பற்றி எதுவும் எழுதவில்லை. அவள் பொதுவாக எழுதினாள்.

கமலா எழுதிக்கொள்வது:-

உங்கள் கடிதம் கிடைத்தது. எனக்கு என்ன பதில் எழுவதென்று தெரியவில்லை. என் மனம், அங்கு வந்து வாழ்வினைத் துவங்க இன்னும் பக்குவப்படவில்லை. இப்பிரச்சினைக்கு முடிவுக்காண எனக்கு ஒரு வழியும் தெரியவில்லை. இருவர் வாழ்விலும் வேதனைதான் மிஞ்சியுள்ளது. நம் திருமணம் இருமனமும் ஒன்றாத திருமணம்; உள்ளங்கள் கலந்திடாத பிணைப்பு; இதயங்கள் இணையாத இணைப்பு என்றே கருதுகிறேன்.

இப்படிக்கு,

கமலா.

ரவியின் பதில் கடிதம் வந்தது. கமலா படித்தாள்.

அன்புள்ள கமலாவுக்கு,

உன் கடிதம் கிடைத்தது. நமக்குள் உள்ள வேறுபாடு பாலங்காண முடியாத இடைவெளி அல்ல. கண்ணிலே அன்பிருந்தாள் கல்லலே தெய்வம் வரும். நெஞ்சிலே அன்பிருந்தால் குற்றங்குறைகள், வேறுபாடுகளுக்குத் திரை விழுந்து அவை தானாக மறைந்துவிடும். பகலவன் கண்ட பனிபோல் அவை விலகிவிடும். அன்பு என்னும் பாலம் இணைக்க முடியாத இடைவெளியே கிடையாது. எனவே உன்னில் அன்பு பிறக்க வழியுண்டு எனில், நம் வாழ்விலும் இன்பம் பிறக்க வழியுண்டு.

இளமையைப் பற்றியும் உனக்குச் சிலவற்றைச் சொல்ல விரும்புகிறேன். காலமும், இளமையும் காத்து நிற்பதில்லை. இளமைக்காலம்தான், வாழ்வின் வசந்தகாலம். ஆம்!. வாழ்வின் இனிய பருவம், இளமைப் பருவம்! இணையிலா இன்பம் காணத் துணை செய்வதும் இளமையே. இழந்துவிட்டால் மீண்டும் பெற முடியாதவற்றுள் இளமையும் ஒன்று. இந்த இளமை வீணாகிவிடக்கூடாது; பாழாகிவிடக்கூடாது. காட்டில் எரித்த நிலவாகிவிடக்கூடாது.

அன்புள்ள ரவி.

அன்பின் வலிமை, இளமையின் அருமை பற்றி ரவி எழுதியிருந்தவற்றைச் சிந்தித்துப் பார்த்தாள். எனினும் ரவியுடன் இணைந்து வாழ அவள் மனம் இணங்கவில்லை. எனவே பதில் ஏதும் போடாமல் இருந்துவிட்டாள். கமலாவின் பெற்றோர் எவ்வளவோ எடுத்துச் சொல்லியும் தன் போக்கினை மாற்றிக்கொள்ளவில்லை. ரவியின் வீட்டிலோ கமலாவை விவாகரத்துச் செய்துவிட்டு வேறு பெண்ணைத் திருமணம் செய்யும்படி ரவியை வற்புறுத்தினர். ‘கமலா மனம்மாறி வருவாள்; விவாகரத்து அவசியமில்லை’ என்று கூறிவந்தான் ரவி.

ரவியோடு வாழ்வதைக் கமலாவால் நினைத்துக்கூடப் பார்க்க முடியவில்லை. நாளுக்கு நாள் கமலாவின் பிடிவாதம் கூடியதே தவிர குறையவில்லை. ரவிக்கு மறுமணம் பற்றிப் பேசுகிறார்கள் என்றும், ரவிதான் மறுத்து வருகிறான் என்றும் கேள்விப்பட்டாள். ‘ரவியின் மறுமணத்திற்குத் தனக்கு ஆட்சேபனை எதுவும் இல்லை’ என்று கடிதம் எழுதி, அவள் பெற்றோர் அறிய, ரவிக்கு அனுப்பிவிட்டாள். ரவி இதை எதிர்பார்க்கவேல்லை. தன் நம்பிக்கை தகர்ந்துவிட்ட ஏமாற்றத்தில் மறுமணத்திற்க ஒத்துக்கொண்டான். இருண்டிருந்த அவன் வாழ்வில் ஒளி ஏற்ற வந்தவள்தான் மோகனா. அவள் படித்தவள் அல்ல; பெரிய பணக்காரியும் அல்ல. சாதாரண குடும்பத்துப் பெண். மோகனாவை ரவி மணந்து கொண்டதைக கமலா அறிந்தாள். அவள் உள்ளம் விரக்தியில் நிறைந்தது. வாழ்வு வெறுமையாகத் தோன்றியது. சென்னையில் இருக்க அவளுக்குப் பிடிக்கவில்லை. சொந்தம், பந்தம் எதுவும் வேண்டாம் என்று புறப்பட்டுவிட்டாள் நீலகிரிப் பிரதேசத்திற்கு, பணம், செல்வாக்கு, அந்தஸ்து இவையாவும் பொருளற்றுப் போயின. வாழ்விலே தோல்விகண்டவளாக, சுக்குநூறாக உடைந்துவிட்ட உள்ளத்தினளாக நீலகிரி மண்ணில் அடைக்கலம் புகுந்தாள். நீலகிரியின் இயற்கை அழகில் தன்னை ஒன்றுபடுத்திக் கொண்டாள். அவள் வேலைக்குச சேர்ந்த பள்ளியில் பயிலும் அந்தப் பிஞ்சு முகங்களில் ஆறுதல் தேடினாள். அவர்களது கொஞ்சும் மழலையிலே அமைதியினைக் கண்டாள். பால் மணம் மாறா பச்சிளம் குழந்தைகளே அவளது நெஞ்சிலே நிம்மதி பொழிந்த அவளது தெய்வங்களாயின. பள்ளி, விடுதி இரண்டின் தோட்டங்களில் மலர்ச்செடிகள் வைத்து, தோட்டப் பராமரிப்பினையும் பொழுதுபோக்காகக் கொண்டாள். இப்படி குழந்தைகள், இயற்கை இவற்றுடன் தன்னை ஈடுபடுத்திக் கொண்டு தன் தனிமையை, வாழ்வின் வெறுமையை மறக்க முயன்றாள். ஆண்டுகள் பல கழிந்தன.

*****

கமலா பள்ளியினை அடைந்து விட்டாள். பழைய நினைவுகளில் மூழ்கியபடி, நடந்து வந்ததால் தூரமும் தெரியவில்லை. நேரமும் அதிகம் ஆனதாகத் தெரியவில்லை. நடந்து வந்த தூரமும், அதற்கு எடுத்துக் கொண்ட நேரமும் குறைவாகவே தெரிந்தன.

‘டீச்சர், நான் உங்க பின்னாலேயே தான் வந்தேன். நீங்க என்னைக் கவனிக்கவே இல்லையே’ அனிடாதான் பைங்கிளிபோல் பேசினாள்.

‘அப்படியா, அனிடா. நான் எப்படியோ கவனிக்காம இருந்திருக்கேன்’. கமலா அன்புத்ததும்பக் கூறினாள். அனிடா போய்விட்டாள்.

கடிதம் வந்ததிலிருந்து கமலா குழம்பிக் கிடந்தாள். அன்று மாலை விடுதியில் தன் அறையில் அமர்ந்து தன் எதிர்காலம் பற்றிச் சிந்தித்தாள். கடிதத்தில் அவள் அறிந்து கொண்ட செய்திகள் யாவும் நினைவுக்கு வந்தன. மோகனா இறந்துவிட்டதிலிருந்து ரவி பித்துப் பிடித்தவன் போல் ஆகிவிட்டான். ரவியின் மகள், ரவியின் தங்கை இருவர் தவிர அவனோடு இருந்து வீட்டைக் கவனிக்க – வேறு பெண்கள் இல்லை. அவர்கள் இரண்டு பேருங்கூட, கொஞ்சக்காலம் மட்டுமே ஒருவர் மாற்றி, ஒருவர் உதவமுடியும். அன்று வந்த கடிதத்தின் மூலமாக இவற்றையெல்லாம் கமலா தெரிந்து கொண்டாள்.

கமலா நீலகிரிக்கு வந்து, தன் உறவு அனைத்தையும் வெட்டிக்கொண்டு தனித்து வாழ்ந்துவிட்ட இத்தனை ஆண்டுகளில், ரவி-மோகனா பற்றி எந்தத் தகவலும் அவளுக்குத் தெரிய வந்ததில்லை. ஒரே ஒரு முறை மட்டும் ரவியையும் மோகனாவையும் நேரிலே பார்க்கும் சந்தர்ப்பம் கிடைத்தது. ஊட்டி மலர்க்கண்காட்சியின் போது, இளம்தம்பதிகளாக தேனிலவுக்காக ஊட்டி வந்திருந்த அவர்களை, கூட்டத்தோடு கூட்டமாக அவர்கள் அறியாத வண்ணம் பார்க்க நேர்ந்தது. கமலா தான் இழந்துவிட்ட இன்ப வாழ்வினை எண்ணி மிகவும் வருந்தினாள். ரவியும், மோகனாவும் இணைந்து செலுத்துகின்ற வாழ்க்கை ஓடம் இன்பக் கரை நோக்கி ஓடிக் கொண்டிருக்கிறது என்பதை மகிழ்ச்சி பொங்கி வழியும் அவர்கள் முகத்திலிருந்து தெரிந்து கொண்டாள். அந்த ஒரே ஒரு சந்திப்புக்குப் பின், ரவி-மோகனா பற்றி எதுவுமே தெரியாதவாறே காலம் ஓடிவிட்டது.

கமலாவின் மனத்தில் ஒரு சிறு சபலம் ஏற்பட்டது. கமலாவின் சம்மதத்தின் பேரில், கமலாவை விவாகரத்துச் செய்யாமலேதான், ரவி, மோகனாவை மணந்து கொண்டான். எனவே சட்டப்படி, கமலா இன்றைக்கும் ரவியின் மனைவிதான். ரவியின் மனைவியாக கமலா இருக்கும்போது ரவியின் குடும்பத்தைக் கவனிக்க யார் யாரையோ ரவி ஏன் நாடவேண்டும்? மனைவியின் உரிமையுடன் கமலா ஏன் ரவியுடன் இணைந்து அவனுக்கு உறுதுணையாக விளங்கக்கூடாது? முன்பு இழந்துவிட்ட அதே வாழ்வினை இனிப்பெற முடியாது என்றாலும் ஏன் அவ்வாழ்வின் சாயலையாவது அனுபவிக்கக் கூடாது? இது போன்ற கேள்விகள் அடுக்கடுக்காகத் தோன்றின கமலாவின் மனத்தில். எனவே நீண்டநாள் தயக்கத்திறக்குப் பின் ரவிக்கு ஒரு கடிதம் எழுதினாள்.

“என் இதய தெய்வத்திற்கு,

இக்கடிதத்தை நீங்கள் எதிர் பார்த்திருக்க மாட்டீர்கள். என் எண்ணங்களைத் தெரிவிக்கவே இக்கடிதம்.

இளமை வேகத்தில்-உள்ளம் பண்படாத வேளையில் -மனம் பக்குவம் பெறாத நிலையில்-அறிவு முதிர்ச்சி பெறாத காலத்தில் நான் மேற்கொண்ட தவறான முடிவுக்காக வருந்தாத நாளே கிடையாது. அது அவசர முடிவு- அறிவற்ற செயல். நான் செய்த குற்றத்திற்கு நல்ல தண்டனை கிடைத்துவிட்டது. என் இளமை வீணாகிவிட்டது. வாழ்வே வெறுமையாகிவிட்டது. தனிமைதான் என் துணையாகியது.

இதை எழுதுவது பழைய கமலா அல்ல. பழைய கமலா என்றோ விடைபெற்று விட்டாள். வாழ்வில் துன்பம், கவலை இவை என்னவென்று அறியாதவள் பழைய கமலா. இப்போதிருப்பவளோ துன்பம், துயரை தவிர வேறெதையும் அறியாதவள்.

ஒரு ஆற்றின் உற்பத்தி ஸ்தானத்திலே கிடக்கும் கரடு முரடான கல் போன்றவள் பழைய கமலா. இன்று இருப்பவளோ அந்த ஆறு கடலுடன் கலக்குமிடத்திலே கிடக்கும் கூழாங்கல். மலைகளைக் கடந்து, வளைந்து, நெளிந்து பாய்கின்ற ஆற்று வெள்ளத்தின் ஓட்டத்தோடு உருண்டு, புரண்டு –முட்டி மோதி அலசடிப்பட்டு- உருத்தேய்ந்து, பழைய கரடு முரடான கோலம் அழிந்து வழவழப்பான புதுக்கோலம் கொண்டுள்ள கூழாங்கல் போன்றவள் தான் இன்றைய கமலா.

ஆம்!. வாழ்வினிலே கவலைக்கும் கண்ணீருக்கும் உள்ளாகி, பழைய இயல்புகள் எல்லாம் மறைந்து அழிந்திடப் புத்துருவம் ஏற்றிருக்கும் புதுக்கமலா இவள்!.

என் தோளினிலே மணமாலையும், என் கழுத்தினிலே மாங்கல்யமும் அணிவித்தது உங்கள் திருக்கரங்கள்தான். என்னை ஏக உரிமையாக, சொந்த உடைமையாக ஏற்றுக் கொண்டதும் உங்கள் அன்பு நெஞ்சம்தான். அன்று என் இளமையை உங்களது சொத்தாக்கிக் கொடுக்கத் தவறிவிட்டேன். என் அழகினை உங்களுக்கு அன்புக் காணிக்கையாகத் தராமல் இருந்து விட்டேன். நான் நினைத்தாலும் இப்போது அவை இல்லை கொடுப்பதற்கு இன்று நான் உங்கள் திருவடிகளில் படைப்பது என் இதயத்தில் சுரந்திடும் அன்பு ஒன்றுதான். எந்த அன்பை அன்று தங்கு தடையின்றி ஈந்து வாழ்வினை இன்பச் சோலையாக்க மறந்தேனோ- மறுத்தேனோ- அந்த அன்பை இன்று உங்கள் பாதமலர்களில் சமர்ப்பிக்கிறேன். இன்று நான் கையேந்தி நிற்பது எல்லாம் அந்நாளில் என்மீது நீங்கள் காட்டத் தயாராக இருந்த கடலளவு அன்பில், ஒரு சிறு கையளவு அன்புக்காகத்தான் இன்று உங்கள் காலடியில் விழுந்து கிடப்பது உங்களது உரிமைப் பொருள்தான். உங்களது சொந்த உடைமைதான். ஆம்! நான் உங்களுக்குச் சொந்தமானவள். என்மேல் கருணை காட்டும்படி கெஞ்சுகிறேன். என்னை ஏற்றுக்கொண்டு, உங்கள் இதயத்திலும், இல்லத்திலும்-எனக்கு இடம் அளிக்கும்படி பணிவுடன் வேண்டுகிறேன்.

அன்புக்காக ஏங்கும்
அபலை கமலா.

*****

‘டீச்சர், நீங்க வேலையை விட்டுட்டு உங்க ஊருக்குச் சீக்கிரத்திலே போகப் போறீங்களா?’

‘ஏன் அனிடா கண்ணு, அப்படிக் கேக்கிற? நான் போகப் போறேன்னு யார் சொன்னது?’

‘‘நீங்கதான் கார்டனர்கிட்டே சொன்னீங்களாம். நான் போயிட்டாக்கூட, இதே மாதிரி தோட்டத்தைப் பாத்துக்கிடனும்னு’’

‘‘அவன் எல்லாரிடமும் அதைச் சொல்லிட்டானா?’’

‘‘இல்லை, டீச்சர், என்னிடம் மட்டும்தான் சொன்னார். அவர் முதலில், உங்க டீச்சர் போயிட்டா நீ என்ன செய்வன்னு கேட்டார். என்னை விட்டுட்டு எங்க டீச்சர் போகமாட்டாங்க. அப்படியே போனாலும் என்னையும் கூடவே கூட்டிட்டுப் போயிடுவாங்கன்னு நான் சொன்னே் ’. அனிடாவின் முகத்தில் அவளது பேச்சில் தொனித்த நம்பிக்கை பிரதிபலித்தது. அனிடா தொடர்ந்தாள்.

‘‘ஏன் டீச்சர், நீங்க ஊருக்குப் போகப் போறீங்களா?’’

‘‘ஆமாம், கண்ணு, ஒருவேளை நான் போயிருவேன்’’

‘‘அப்படி நீங்க போனா, என்னையும் உங்களோட கூட்டிட்டுப் போவீங்களா, டீச்சர்?’’ அனிடாவின் கேள்விக்கு ‘முடியாது’ என்று நேரிடையான பதிலைக் கூறி, அனிடாவின் மனம் வாடும்படி நடந்து

கொள்ள கமலா விரும்பவில்லை. ஒரு குழந்தையின் உள்ளம் எத்தனை பேதமை படைத்ததாய் உள்ளது என்று நினைத்துக் கொண்டாள். நடக்கக் கூடியதா, இல்லையா என்றெல்லாம் பார்க்காமல், தனது விருப்பங்களை ஒளிவு மறைவின்றி வெளியிட்டு விடுகின்றது குழந்தை!.

‘‘போகும்போதே கூட்டிட்டுப் போக முடியலைனாக்கூட, நான் அங்கே போய் உன்னை அழைச்சுக்கிடுவேன், சரியா அனிடா’’

‘‘சரி டீச்சர், உங்களைப் பிரிஞ்சி என்னால இருக்க முடியாது’’.

*****

தனக்கு விடிவுகாலம் வரப் போகிறது, தன் துயருக்கெல்லாம் முடிவுகாலம் வரப்போகிறது என்று நம்பி, ரவியின் பதிலுக்காக ஆவலோடு காத்திருந்தாள். ரவியின் கடிதம் ஒருநாள் வந்தது. கமலா அதனைப் படித்தாள்.

‘அன்புள்ள கமலாவுக்கு,

உன் கடிதம் கிடைத்தது. எனக்கு என்ன பதில் எழுதுவதென்றே தெரியவில்லை. மனத்தில் ஏதேதோ எழுதத் தோன்றுகிறது. ஆனால் உன் மனம் புண்படும்படி எதையும் எழுத விரும்பவில்லை.

என் மனநிலையை புரியச் செய்ய எதை எழுதினால் போதுமோ, அதனை மட்டும் எழுதுகிறேன்.

கமலா, நீ என்னுடையவள்தான். அதில் சந்தேகமேயில்லை.

மோகனா இவ்போது இல்லை எனினும் அவள் இறந்துவிட்டாள் என்பதை ஏற்க மறுக்கிறது என் நெஞ்சம். மோகனாவின் உருவம் என் இதயத்தில் அழியாத ஓவியமாக ஆழப் பதிந்துள்ளது. மோகனா மறைந்துவிட்டால்கூட அவள் விட்டுச் சென்றுள்ள நினைவுகள் மறைந்துவிடவில்லை. மலர் வாடிவிட்டது. ஆயினும் அதன் மணம் நிலவத்தான் செய்கிறது. நெஞ்சுக்கினிய அந்த நினைவுகளில் எனது எஞ்சிய காலத்தைக் கழித்துவிட விரும்புகிறேன். நிலைத்து நிற்கும் அவளது நினைவுகள் மறையும் வண்ணம், இதயத்தில் அவளது ஓவியம் அழியும் வண்ணம், நான் எதையும் செய்ய விரும்பவில்லை.

பிரிந்து போன பாதைகள் மீண்டும் சந்திப்பதும் உண்டு. சந்திக்காமல் போவதும் உண்டு. நம் வாழ்விலோ, நம் வாழ்க்கைப் பாதைகள் மீண்டும் சந்திக்காதோ என்று தான் சந்தேகிக்கிறேன்; அஞ்சுகிறேன்.

என் மனத்தை உனக்கு வெளிப்படுத்துவதற்காக இங்கு எழுதப்பட்டிருப்பவை உன் மனத்தை வருந்தச் செய்யாது என நம்புகிறேன்.

அன்புள்ள ரவி.

-----

‘‘டீச்சர், ஏன் ஒரு மாதிரி இருக்கீங்க! உடம்பு சரியில்லையா?’’.

‘‘உடம்புக்கு ஒண்ணுமில்லை, அனிடா’’

‘‘பின்னே ஏன் டீச்சர் இப்படி இருக்கீங்க. நீங்க ஊருக்குப் போவதை நினைச்சி நாங்க எல்லாரும்தான் கவலையா இருக்கோம்’’

‘‘நீங்கன்னா, யாரு அனிடா?’’

‘‘ஹாஸ்டல் பிள்ளைங்க எல்லாரும், டீச்சர்’’

‘‘நான் போறேன்னு அவங்களுக்கு எப்படித் தெரியும்?’’

‘‘நான்தான் டீச்சர் சொன்னேன்’’

‘‘என்ன அனிடா, சொன்ன?’’

‘‘டீச்சர் சீக்கிரமா மதுரைக்குப் போயிருவாங்க. அங்கே போனபிறகு என்னையும் கூட்டிக்கிடுவாங்க நானும் அங்கே போய் அவங்களோட இருப்பேன்னு, சொன்னேன் டீச்சர்’’

அனிடா எல்லோரிடத்திலும் சொல்லிவிட்டதற்காக, அவளை எதுவும் சொல்லத் தோன்றவில்லை, கமலாவுக்கு. பெரியவளான தானே கார்டனரிடம் சொல்லியிருக்கும்போது, பாவம் குழந்தை என்ன செய்வாள்?’’

‘‘ஹாஸ்டல் பிள்ளைங்க எல்லாம், ஏன் அனிடா, கவலைப் படுறாங்க?’’

‘‘நீங்க போயிட்டீங்கன்னா, உங்களை மாதிரி எங்களை யாரும் கவனிக்க மாட்டாங்களேன்னுதான்’’.

‘‘அனிடா, நான் உங்களை விட்டுப் போகமாட்டேன்’’

‘‘அப்படீன்னா, நீங்க ஊருக்குப் போகலையா; டீச்சர்?’’

‘‘நான் ஊருக்குப் போவதாக இல்லை, அனிடா; இனி இது தான் என் ஊர். நான் ஒருநாளும் இந்த ஊரை விட்டுப் போகமாட்டேன். உங்களையும் விட்டுப்போக மாட்டேன்.’’ அனிடா இதை யாவரிடமும் சொல்ல ஓடிவிட்டாள்.

கமலா ஜன்னல் அருகே நின்று வெளி உலகினைப் பார்க்கிறாள். தூரத்து மலைகளைப் பனிப்படலம் மறைத்து நிற்கின்றது. கமலாவின் விழிகளை நீர்ப்படலம் மறைத்து நிற்கின்றது.

*****